RS Polyclinic
MULTI SPECIALITY DOCTORS
Dr. M. Rajkumar
MBBS, M.S (ENT), D.N.B (ENT)
9543025994
ENT Specialist
Dr. K. Nanditha Bhuvaneswari
M.S (Ophthalmology)
9444 288784
Eye Specialist
Dr. Santhosh Rajkumar
MBBS, M.S (ENT), D.N.B (ENT)
9445 401793
Laparoscopic & Laser Surgeon
Dr. Bharathi R.
MBBS, M.S (ENT), D.N.B (ENT)
9884 682945
ENT Specialist
Dr. Sabina R.
MBBS, MD
97780 97742
General Physician
Dr. Praveena S.
MBBS, M.S (ENT)
9944 100443
ENT Specialist

தமிழ் குரல் மக்கள்
திசைரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெசிடென்சி சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Karumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

லைகா புரொடக்ஷன்ஸ் வழங்கும், மணி ரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள 'இஞ்சி வெல்லம்' திரைப்படம் ஜனவரி 29, 2027 அன்று வெளியீடு!



சென்னை – 13 நவம்பர், 2026 லைகா புரொடக்ஷன்ஸ் வழங்கும், மணி ரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள 'இஞ்சி வெல்லம்' திரைப்படம் ஜனவரி 29, 2027 அன்று வெளியீடு! சுபாஸ்கரன் தலைமையிலான லைகா புரொடக்ஷன்ஸ் வழங்கும், மணி ரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள 'இஞ்சி வெல்லம்' திரைப்படம் ஜனவரி 29, 2027 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. இந்தியத் திரையுலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் மணி ரத்னம் இயக்கத்தில், லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் 'இஞ்சி வெல்லம்' திரைப்படத்தின் உலகளாவிய திரையரங்க வெளியீட்டுத் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படம், அடுத்த வருடம் ஜனவரி 29 ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. லைகா புரொடக்ஷன்ஸ் மற்றும் இயக்குநர் மணி ரத்னம் கூட்டணி இதற்கு முன்பு 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தின் மூலம் பிரம்மாண்டமான வெற்றியை பதிவு செய்தனர். இந்தக் கூட்டணி தற்போது மீண்டும் இணைந்துள்ளது. இந்த முறை, மக்கள் செல்வன் விஜய் சேதுபதி மற்றும் சாய் பல்லவி முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்கும் மனதை வருடும் காதல் மற்றும் உறவுகளை மையமாகக் கொண்ட திரைப்படமாக 'இஞ்சி வெல்லம்' உருவாகியுள்ளது. தனது தனித்துவமான கதை சொல்லும் பாணியாலும், நேர்த்தியான திரைப்பட உருவாக்கத்தாலும் ஏராளமான வளரும் இயக்குநர்களுக்கும் சினிமா ரசிகர்களுக்கும் தொடர்ந்து உத்வேகம் அளித்து வருபவர் இயக்குநர் மணிரத்னம். ஒவ்வொரு புதிய படைப்பின் மீதும் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் அவரது இயக்கத்தில் உருவாகும் இப்படமும் கவனம் ஈர்த்துள்ளது. அதேபோல், திட்டமிட்ட கால அட்டவணைப்படி படப்பிடிப்பை நிறைவு செய்யும் அவரது பணித்திறனும் தயாரிப்பாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. தற்போது படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன இப்படத்தில் கன்னட நடிகை சைத்ரா ஆச்சாரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். பல மொழித் திரைப்படங்களில் தனது திறமையான நடிப்பால் கவனம் ஈர்த்து வரும் இவர், 'சப்த சாகரதாச்சே எல்லோ சைடு பி' உள்ளிட்ட திரைப்படம் மற்றும் 'மீசைய முறுக்கு 2', '3BHK', 'ரூம் நம்பர் 418' உள்ளிட்ட திரைப்படங்களிலும் நடித்துள்ளார். இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்கும் வகையில், ஆஸ்கர் விருது வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார். சமீபத்தில் வெளியிடப்பட்ட பிட் டிராக் பாடலுடன் கூடிய கிளிம்ப்ஸ் வீடியோ, கொல்கத்தாவின் அழகையும், படத்தின் தனித்துவமான காட்சியமைப்பையும் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் காட்சியமைப்பும் இசையும் ரசிகர்களிடையே கவனத்தைப் பெற்றுள்ளன. இதனால், படத்தின் முழுமையான இசை ஆல்பத்தைக் கேட்கும் ஆர்வமும் ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது. படத்தின் முதல் பாடல் வெளியீடு, இசை வெளியீட்டு

விழா மற்றும் டிரெய்லர் குறித்த கூடுதல் அறிவிப்புகளைப் படக்குழுவினர் விரைவில் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.